**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-05032021-3639

Volume: 5

Issue: 3

Month: January

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 30.10.2020

Accepted: 15.11.2020

Published: 01.01.2021

Citation:
Alibava, U. "The Creative Techniques of Kunangudi Masthan Sahib." *Shanlax International Journal of Tamil Research*, vol. 5, no. 3, 2021, pp. 29–39.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i3.3639

*Corresponding Author:
alibavapkm@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# The Creative Techniques of Kunangudi Masthan Sahib

**Dr. U. Alibava**
*Professor & Head, Department of Tamil Studies*
*Bharathidasan University, Tiruchirappalli, Tamil Nadu, India*

**Abstract -** The songs of kunangudiyar excel at many stages in the world of Tamil Literature with lucidity and sweetness. These songs possess powerful vocabulary, excellent sound effects and kindle the interest of the common man to read them. Through his unquie techniques, Kunangudiyar attracts the hearts of the readers and makes the world to celebrate his songs.

**Key Words:** Tamil Poems, Mystical poem, kunangudi manthan sahip poems, Creativity, technique, rhetoric, traditional terms, cultural terms, rhyming words, emotional terms, proverbs, similes.

**References**

1. Abdul Raguman (Editor). (1980). *Kunangudiyar Patarkovai*. Sivakangai, Akaram.
2. Nayinar Mohammed, C. (1993). *Masthan sahibum Thayumanavarum - oru Oppunokku*. Tiruchirappalli, Umaru Pathipagam.
3. Mohammed Uvaish, M. (1965). *Gnanach Selvar Kunangudiyar*. Chennai, Universal Publisar.
4. Narayanasamy Mudhaliyar (Editor). (1875). *Masthan sahibu paadal*. Chennai, Prabakar Achukkoodam.
5. Rashith, NA. (1977). *Gnana vallal Gunagudi Masthan sahibu Padalum Uraium*. Chennai, Gnana vallal pathippagam.
6. Velayutha Mudhaliyar (Editor). (1887). *Mashdhan sahibu Thiruppadalthirattu*. Chennai, Kalakkiyana vilakka achukkudam.

# குணங்குடி மஸ்தான் சாகிபின் படைப்பாக்க உத்திகள்

**முனைவர் உ. அலிபாவா**
பேராசிரியர் & தலைவர், தமிழியல்துறை
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

***ஆய்வுச் சுருக்கம்:*** *எளிமையும், இனிமையும், வாய்ந்த குணங்குடியார் பாடல்கள் தமிழ் இலக்கிய உலகில் பல படிநிலைகளில் சிறந்து விளங்குகின்றன. இவை சொல்லாட்சிச் சிறப்பும் ஓலிநயமும் பாமரரையும் படிக்கத் தூண்டும் வளமும் மிக்கவை. படிப்பார் மனங்களைக் கவரும் பல்வேறு உத்திமுறைகளைக் கையாண்டு பாடியுள்ள குணங்குடியாரின் பாட்டுத்திறம் வையத்தைப் பாலித்திட வைக்கும் பான்மையது.*

***முதன்மைச் சொற்கள்:*** *தமிழ்க் கவிதை, சூஃபி நெறி, குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள், படைப்பாக்கம், கற்பனை, சொல்லாட்சி, புலப்பாட்டு நெறி, பழமொழி, மரபுத்தொடர்*

குணங்குடியாரின் ஒட்டுமொத்தப் பாடல்கள் குறித்துக் கருத்துரைக்கும் சி.நயினார் முகம்மது, "இவற்றை மூன்று பெரும் பிரிவுகளாகப் பகுக்கலாம். 1. சூஃபித்துவக் கருத்து விளக்கம், 2. இந்திய நாட்டுச் சித்தர்களின் யோகநெறி வழிப்பட்ட அணுகுமுறை, 3. நாட்டுப்புறப் பாடல் போக்கும் இசையும் கூடிய ஆன்மப் பயண அனுபவ வெளியீடு. இதனை மொழிநடை அடிப்படையிலும் மூன்று கூறுகளாகப் பிரிக்கலாம். முதற்பகுதியில் இஸ்லாமிய ஞான வழியை விளக்குவதற்கு இன்றியமையாத அரபி மொழிச் சொல்லாட்சி, இடைப் பகுதியில் சூஃபி வழியைத் தமிழ் நாட்டுச் சூழலுக்கேற்ப விளக்கும் சித்தர் மொழிநடை, இறுதிப் பகுதியில் ஆன்ம அனுபவத்தை உணர்வு புர்வமாக வெளியிடும் வழக்குச் சொற்கள் விரவிய இசை வடிவங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன" (மஸ்தான் சாகிபும் தாயுமானவரும் - ஓர் ஒப்புநோக்கு, ப. 103) என்று குறிப்பிடுகிறார்.

## கற்பனை

கண்கள் ஒரு பொருளைக் காணாத நிலையிலும் அப்பொருளை மனத்திரையில் நினைவிற்குக் கொண்டு வருவதும், உள்ளதை உள்ளவாறு கூறாமல், உள்ளம் மகிழுமாறு வெளிப்படுத்துவதும் கற்பனையாகும். குணங்குடியார் தம்முடைய இறை அனுபவங்களைக் படிமக்கற்பனையாக வெளிப்படுத்துகிறார். இறைவனைப் பெண்ணாகக் குறியீடு செய்து குணங்குடியார் மனோன்மணிக் கண்ணி பாடுவது இதற்குச் சிறந்த சான்றாகும். இது போன்று பல பாடல்களிலும் தாம் உணர்வதைக் காட்சிப்படுத்திக் காட்டுகிறார்.

## சொல்லாட்சி

அழகு மிக்க சொற்களைக் கையாளும் கைவண்ணம் மிக்கவன் கவிஞன். அவன் கருத்தாழத்தை வெளிப்படுத்தும் உணர்வில் வெளியிடும் சொற்கள், எளிய சொற்களாயினும், எல்லோரும் அறிந்த சொற்களாயினும், பேச்சு வழக்குச் சொல்லாயினும், கொச்சை வழக்காயினும் புத்துணர்வு பெற்றுவிடுகின்றன. அவ்வகையில் தேர்ந்த, கருத்துச் செறிவுமிக்க சொற்களையும், தொடர்களையும் குணங்குடியார் கையாள்கிறார். சித்தர் நடையும், சூஃபி நடையும் கலந்த பரிபாஷை சொற்களை நூல் முழுவதும் மீண்டும் மீண்டும் பயன்படுத்துகிறார். இது தவிர இன்ன பிற உத்திமுறைகளையும் தம் பாடல்களில் ஆளுகிறார்.

**மரபுத் தொடர்கள்**

குணங்குடியாரின் மொழிநடை தனித் துவமானது. சொல்ல வரும் கருத்தைத் தம் சொல்லாட்சித் திறத்தால் திறம்படக் கூறும் இவர்,

**அல்லும்பகலும் அடிமைமனம் தேம்புதற்குக்**
**கல்லும் கரைந்திடுமென் கண்ணே றகுமானே**
**(21)**

என்று ரகுமான் கண்ணியில் "அல்லும் பகலும்" என்ற மரபுத் தொடரைக் கையாள்கிறார். இதேபோல் "நெல்லில் பதர்", "விட்டகுறை தொட்ட குறை", "சண்டியிலும் சகசண்டி" போன்ற மரபுத் தொடர்களையும் கருத்துக்களை விளக்கும் பொருட்டு எடுத்தாள்கிறார். இறைவனை நினைத்துக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்குவதை விண்ணிலிருந்து பெருகி வந்த கங்கையாகக் குறிப்பிடுகிறார்.

**வழக்குத் தொடர்கள்**

கருத்துப் புலப்பாட்டு எளிமை கருதிப் புலவர்கள்பேச்சுவழக்குத்தொடர்களையும் சொற்களையும் பயன்படுத்துவர். இவை மக்களை ஈர்க்கும் ஆற்றல் உடையவை.

**கத்திக் கத்தித் தொண்டையுங் கட்டிச் செத்தேனே**
**காணும் எங்கள் குணங்குடிச் சித்தனே**
**(14)**

என்ற பிசுமில்லாகி கீர்த்தனையில் கத்தி கத்தி எனும் வழக்குச் சொற்களை இயல்பாகப் பயன்படுத்துகிறார்.

**தாடிமீ சைகள்நரைத் தும்தவ மிலார்உறவு**
**"சை"என்பது எக்கா லமோ**
**சண்டைநின் றிடுவதும் மண்டைபிண் டுடைவதும்**
**"சள்" என்பது எக்கா லமோ**
**(மு.ச.82)**

எனும் அடிகளில் பேச்சு வழக்கில் உள்ள "சை", "சள்" எனும் எளிய உணர்ச்சிச் சொற்களைக் கையாண்டு பாடல் புனைந்துள்ளார்.

**சீநாயே யோடென் றடித்துத் துரத்துஞ்**
**சிரிப்பினைப் பட்ட ழுவனோ**
**நாயினும் கடைகெட்ட நாயினும்**
**நாயினும் கடைகெட்ட**
**நாய்போல் அலைந்த ழுவனோ**
**(மு.ச.73)**

என்ற முகியித்தீன் சதகப் பாடலடியில் "சீநாயே ஓடென்று அடித்துத் துரத்தும்சுசு எனும் பேச்சு வழக்குத் தொடரினை ஆள்கிறார். இவைதவிர கோடானு கோடி, காசு பணம், இரணம், ஈடு சோடு, உரன்முறை, ஏவல்விலக்கு, லொடலொட்டை, சண்டாளன், ஓட்டாண்டி, கஞ்சி, சமுசாரி, சும்மா, சுதானம், சொந்தம், சோம்பேறி, டம்பஜம்பம், வறவோடு, நாற்றக்கருவாடு, சல்லிக்குணம், கெட்ட புல்லர்கள், சகசண்டி, கொலை பாவி, மல்லாடுதல் போன்ற வழக்குச் சொற்களையும், மடையன், மட்டிப் பயல், புழுக்கப் பயல், வெங்கம் பயல், ஐயையோ, எச்சில்தனம், கடைமயிர்தான், படுசுட்டி, போக்கிரி, கெசபோக்கிலி, நாரி, துப்புக் கெட்டு, பழஞ்செருப்பு ஆகிய கொச்சைச் சொற்களையும் பயன்படுத்தி எல்லோரையும் பாடி மகிழத் தூண்டுகிறார். அத்தன், அப்பன், ஐயன், ஆச்சி, மைச்சினிச்சி போன்ற வழக்கில் உள்ள உறவுச் சொற்களையும், சிலேடைப் பொருளாக இருந்தபோதும் தொண்டி, அறந்தாங்கி, தஞ்சாவூர், கலகம் ஆகிய ஊர்ப் பெயர்களையும், நாகூர் என்ற ஊர்ப் பெயரையும் பயன்படுத்துகிறார்.

சைவ அடியார்கள் இறைவனின் அருளை இரந்து நாயேன், கடையேன், அடியேன் எனப் பாடுவர். அதே போல் குணங்குடியாரும் தம்மை நீசன், பாவி, அறியாச் சிறியேன், தொழும்பன், புலையன், முட்டாள், வட்டன், கற்குணத்தான் எனவெல்லாம் கூறிக்கொள்கிறார். ஒரு பொருட் பன்மொழிகளையும் குணங்குடியார் தம் பாடல்களில் அமைத்துள்ளார். கூறுதல் எனும் பொருளில் அறைதல், இசைத்தல், இயம்புதல், செப்புதல், சொல்லருள் செய்தல், பகர்தல், பேசல், நவில்தல் எனும் பல

சொற்கள் இடம் பெற்றுள்ளன. உடலை உடலம், புழுக்கூடு, கூடு, காயாபுரிக் கோட்டை எனப் பல சொற்களால் குறிக்கிறார்.

பேச்சு வழக்கிலுள்ள கதகத, களகள, தளதள, சதசத, மடமட, குமுகுமு போன்ற இரட்டைக் கிளவித் தொடர்களையும் பல பாடல்களில் ஆள்கிறார்.

**சொல்லடுக்குத் தொடர்**

சொல்லவரும் கருத்துக்கு அழகு சேர்க்கும் வண்ணம் குணங்குடியார் சொற்களைக் கையாள்கிறார். சொற்களைப் பாடல்களில் அடுக்கி ஆள்கிறார். இது பாடலுக்கு ஓசை நயத்தைக் கூட்டுவதுடன், படிப்பாரை மனங்கொள வைக்கும் பாங்கினவாயும் அமைந்துள்ளன.

**நோக்குநோக் கொண்ணாத நோக்கு நோக் காநின்ற**
**நோக்கெனது முன்னிற் கவே (மு.ச.4)**
**மெய்யான பொய்யுடலை மெய்யென்று மெய்யான**
**மெய்யறிவு கெட்ட பாவி (மு.ச.65)**
**தீபாவி தீபாவி தீபாவி தீபாவி**
**திவ்யகுண மற்ற பாவி (மு.ச.65)**
**அனியாயம் அனியாயம் அனியாயம் என்கொடுமை**
**அனியாயம் என்றழு வனோ (மு.ச.71)**
**எக்காலம் எக்காலம் எக்காலம் எக்காலம்**
**என்றழுவ தெக்கா லமோ (மு.ச.90)**
**அபயம் எனைக்காப்பது அண்ணலே உன்னுபயம்**
**உபயம் உபயம் முனதுபயம் நிராமயமே**
**(நிரா.71)**

எனப் பல பாடல்களில் சொல்லடுக்குத் தொடர்களையும் சொற்பொருட் பின்வரு நிலைகளையும் குணங்குடியார் ஏராளமாகக் கையாள்கிறார். மேலும் நிராமயக் கண்ணியில் "உன்னி உன்னி[1]"(29), "எண்ணி எண்ணி" (32,54,89), "தொழுது தொழுது"" (36), "ஆணையிட்டேன் ஆணையிட்டேன்" (74) போன்ற பல அடுக்குத் தொடர்களையும் ஆள்கிறார்.

**உணர்ச்சித் தொடர்**

எளிய சொற்களில் ஆழ்ந்த கருத்துக் களை இயம்பும் குணங்குடியார் பல்வேறு உணர்வு நிலைகளையும் தம் பாடல்களில் படம்பிடித்துக் காட்டுகிறார். வீரவுணர்வை "மீசையுள்ள ஆண் பிள்ளைச் சிங்கங்கள் என்கூட வெளியிலே வாருங்கள் காணும்" (20) எனும் கீர்த்தனைப் பாடலடி மூலம் வெளியிடுகிறார்.

**கருத்துக்களை நிரல்படுத்துதல்**

பல்வேறு கருத்துக்களைக் குணங்குடியார் ஒரே தொடரில் நிரல்படுத்திக் கூறுகிறார். நாடு உண்டு, நகர் உண்டு, நல்லோர்களும் உண்டு, நாதனும் உண்டு, ஓடும் எனக்கும் உண்டு என்னும் ஐந்து கருத்துக்களை,

**நாடு நகருண்டு நல்லோர் களுமுண்டு நாதனுமுண்டு ஓடு மெனக்குண்டென் றெண்ணியுன் கையி லுடல்பசித்தால்**
**(தவமேபெற வேண்டுமெனல்.13)**

என ஒரே தொடரில் அடுக்கியாளும் குணங்குடியார் கருத்துக்களை அழுத்தம் திருத்தமாகச் சுட்டுவதற்கு உண்டு என்னும் சொல்லையே மீண்டும் மீண்டும் பயன்படுத்துகிறார். இவ்வாறு சொல்வது வடிவச் சிறப்பையும் தருகிறது.

**வினாத் தொடர்**

குணங்குடியார் தம் பாடல்களில் வினாக்களைத் தொடுத்துக் கருத்துக்களை விளக்குகிறார். பல பாடல்களில் பல்வேறு முறைகளில் பல்வேறு வினாக்களைத் தொடுக்கும் இவர்,

**எந்தவித மாயினு மிணங்கவிலை யென்மனம் இணங்கவிலை யென்ற மூவனோ**
**(மு.ச.72)**

என முகியித்தீன் சதகத்திலும்,

**பொய்யே மிகுந்த புதர்ப்பாவிப் பையல்யான்**
**அய்யோவென் றேயழுதுன் னடிபணிவ**
**தெக்காலம்** **(12)**

என எக்காலக் கண்ணிப் பாடல்கள் முழுவதிலேயும்,

**எனக்கோர் நிகருமில்லை இல்லாரில் வல்லாரில்**
**உனக்கோர் நிகரொருவர் உண்டோ நிராமயமே**
**(127)**

என்று நிராமயக் கண்ணியிலும் வினாக்களை முன் வைக்கிறார்.

### பிறமொழிச் சொற்கள்

குணங்குடியார் பாடல்களில் அறபு, உருது, பாரசீகச் சொற்களும், வட சொற்களும் ஏராளமாகக் காணக் கிடக்கின்றன. தெலுங்கு, கன்னடம், மலையாளம், மராத்தி மொழிச் சொற்களும் இருக்கின்றன.

"உண்மைப் பொருளானவன்" எனும் பொருள்படும் "ஹக்அன்" என்ற அறபுச் சொல்லை "அக்கன்" என்று பயன்படுத்துகிறார். "அகது" (ஒருவன்), "அல்லாகூ" (இறைவன்), "அல்லல்லாகூ" (இறைவன்), "அலிபு" (முதன்மையும் மூலமுமான நிலை), "அறுவாகு" (உயிர்கள்), "இல்லல்லா" (அல்லாஹ்வைத் தவிர), "இறசூல்" (இறைத்தூதர்), "உலமாக்கள்" (மார்க்க அறிஞர்கள்), "ஒலி" (இறைநேசர்), "கதீம்" (புர்வீகமானவன்), "கபறு" (மண்ணறை - அடக்கவிடம்), "கபுல்" (ஏற்றுக் கொள்ளுதல்), "கமால்" (பரிபுரணத் தன்மை), "கலிமா" (இஸ்லாமிய மூலமந்திரம்), "சேகு" (பெரியவர்), "தீன்" (மார்க்கம்), "பிசுமில்" (திருநாமம்), "ஜமால்" (அழகு), "ஜலால்" (கண்ணியம்) போன்ற அறபுச் சொற்களைக் கையாள்கிறார்.

"சறுதாறு" (தலைவன்), "சுமாறு" (அளவு), "பாத்துஷா" (அரசர், தலைவர்), "பீங்கான்" (தட்டைப் பாத்திரம், உண்கலம்), "பீறு" (குரு) முதலிய பாரசீகச் சொற்கள் இடம்பெறுகின்றன.

"சவ்வாது" (வாசனைத் திரவியம்), "சலுதி" (விரைந்து), "பாறா" (காவல்), "வதல்ஆள்" (பிரதிஆள்) ஆகிய உருதுச் சொற்கள் ண் இருக்கின்றன.

அறபு, உருது, பாரசீகச் சொற்களினும் மிகுதியாக வடசொற்கள் குணங்குடியார் பாடல்களில் காணப்படுகின்றன. "செகம்", "திவ்யம்", "வேசம்", "பிரபஞ்சம்", "பிரகாசம்", "ஆனந்தம்" என ஏராளமான வடசொற்கள் இவர்தம் பாடல்களில் கொட்டிக்கிடக்கின்றன.

வில்லங்கம் என்ற மராத்திச் சொல்லையும், சலுவுதுரை என்ற தெலுங்குச் சொல்லையும், அக்கரை என்ற கன்னடச் சொல்லையும், பறைந்தான் என்ற மலையாளச் சொல் லையும் குணங்குடியார் ஆண்டுள்ளமை அவரின் பிறமொழித் திறனுக்குச் சான்று பகர்கின்றது.

பிறமொழிச் சொற்கலப்பு இருந்தபோதும் "விரிகருணைச் செஞ்சுடர்", "தவக்கனல்", "மாசிலாமணிமாலை", "வாயிற் சிறந்த மொழி", "செங்கீரையாடு சிறு மதலை", "கைக்குள் வளர் நெல்லிக்கனி", "வாரா நெறிக் கருணை" போன்ற தேர்ந்த தமிழ்ச் சொற்களும் குணங்குடியார் பாடல்களில் காணப்படுகின்றன.

### பழமொழி

வழக்கிலிருக்கும் பழமொழிகளையும் குணங்குடியார் கருத்துப் புலப்பாட்டிற்காகக் கையாள்கிறார். "எறும்பு ஊரக் கல்லும் தேயும்" என்னும் பழமொழியை நிராமயக் கண்ணியில்,

**எறும்புஊர ஊர இரும்புமுதல் தேய்வதுபோல்**
**இறும்புரும் அன்பர்உளம் இத்தகையே**
**நிராமயமே** **(94)**

என்று பயன்படுத்துகிறார். அகத்தீசன் சதகத்தில் "கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைந்த கதை போல" என்னும் பழமொழியை,

**கையில்வெண் ணெயைவைத்து நெய்க்கழா**
**வண்ணமென்**
**கலிதீர்த்து னருள்பு ரியவும் (30)**

என்று எடுத்தாள்கிறார். இதே பழமொழியை,

**கைக்குள்வெண் ணெயைவைத்து நெய்க்கழுத**
**பாவிகலை**
**கற்றுமறி வற்ற பாவி (69)**

என முகியித்தீன் சதகத்திலும் ஆள்கிறார். இப்பாடலில் "கற்பக விருட்சத்தின் அடியிலே காஞ்சிரங்காய் தேடி நின்ற கதை போல", "கொக்குப் பிடிக்க நாய்க்குத் தெரியுமோ", "குருடர்கள் யானையைக் கண்ட கதை போல", "அமுதம் உண்கிற வாயால் விடம் உண்பார்களா" என நான்கு பழமொழிகளைக் கையாள்கிறார். இன்னொரு பாடலில் "மந்திரத்தால் மாங்காய் விழாது" என்னும் பழமொழியைக் குணங்குடியார் நயம்படப் பயன்படுத்துகிறார்.

மனத்தின்பல்வேறு இயல்புகளைக்"கள்ள மனம் துள்ளும்" என்னும் பழமொழியின் வாயிலாக விளக்குகிறார். நிலையாமையைப் புலப்படுத்த "இன்றிருப்பார் நாளையில்லை" என்னும் பழமொழியைப் பயன்படுத்துகிறார்.

தன்னைச் சேர்ந்தவரின் குறையைக் கூறுவதை "மல்லாந்து படுத்துக்கொண்டு மேல் உமிழ்ந்தாலும் தன் மார்பில்தான் விழும்" என்னும் பழமொழியையும், "தன் பல்லைக் குத்தி முகர்ந்தாலும் நாறும்" என்னும் பழமொழியையும் கொண்டு மனோன்மணிக்கண்ணியில் (72) எடுத்துரைக்கிறார்.

**பெண்களுக்குப்பேயுமனமிரங்கிடுமென்**
**றெவ்வுலகும்**
**பேசக் கேட்டேன்**
**பெண்களுக்குப் பேயுமன மிரங்கியொரு**
**பேச்சேனும்**
**பேசக் கேளேன் (கீர்த்.18)**

என்ற பாடலில் "பெண்ணென்றால் பேயும் இரங்கும்" எனும் பழமொழியைச் சுட்டுகிறார். இங்ஙனம் நூல் முழுதும் பல பழமொழிகளைக் கையாண்டுள்ளார்.

**உவமை நயம்**

படிப்பார்க்குப் பொருளை எளிதில் புலப்படுத்தும் வண்ணம் புலவர்கள் உவமைகளை அதிகம் கையாள்வர். இது பொருளைப் புலப்படுத்துவதுடன் நில்லாமல் இலக்கிய நயத்தையும் கூட்டுகிறது. பெரியோர்களும் இலக்கிய வாணர்களும் பழமொழிகளையும் உவமைகளையும் உருவகங்களையும் அதிகம் கையாள்கின்றனர். இதனைக் குணங்குடியாரும் நயம்படக் கையாள்கிறார்.

"மின்னலைப் போன்ற பொய்யுடலை மெய்யென்று சொல்லும் பொய்யர்கள் இனி என்னகதி பெறுவார்களோ எந்தாயே நிராமயமே" எனக் கூறும் குணங்குடியார் உடலை மின்னலைப் போன்ற பொய்யுடல் என்கிறார். இதனை,

**மின்னனைய பொய்யுடலை மெய்யென்ற**
**பொய்யரினி**
**என்ன கதிபெறுவார் எந்தாய் நிராமயமே**
**(நிரா.181)**

எனப் புலப்படுத்துகிறார். அழியும் இயல்புடைய மனித உடலை ஊத்தைக்குழி, குட்டிச்சுவர் என்கிறார். இதனை,

**ஊத்தைப் பிணமாம் உடலை இடிசுவரை**
**ஏற்றபடி விடுதல் ஈனம் நிராமயமே**
**(நிரா.23)**

எனப் புலப்படுத்துகிறார்.

"கொப்பவிரைக்குள் குடியிருந்த தன்மையைப் போல எந்தப் பொருளுக்கும் சித்துப் பொருளாய் இருந்தாய்" என்பதை உவமை வாயிலாக,

**கொப்புவித்தி னுள்ளே குடியிருந்த கொள்கையென**
**எப்பொருட்குஞ் சித்தா யிருந்தாய் நிராமயமே**
**(நிரா.81)**

என உரைக்கிறார்.

உள்ளம் பதைத்து உருகுவதற்கு "உலையிலிடு மெழுகு போல" என்னும் உவமையை,

**உலையி லிடுமெழுகா யுள்ளம் பதைத்துருகிக்**
**கலங்கியதுங் கண்டிலையோ கண்ணே பராபரமே**
**(கண்மணி மாலைக் கண்ணி.78)**

எனப் பயன்படுத்துகிறார். மனம் ஒருநிலைப் படாமல் அங்குமிங்கும் அலைவதை,

**பித்தம் பிடித்தலையும் பேய்க்குரங்குபோற் கரணம்**
**புத்தி தனையலைக்கப் போமோ நிராமயமே**
**(நிரா.74)**

**ஆழித் துரும்பென அங்கும் இங்கும்**
**அலைந்து திரிவதில் அஞ்ஞானந் தங்கும்**
**(ஆனந்தக் களிப்பு.11)**

என உணர வைக்கிறார். இதே கருத்தைப் புலப்படுத்த "சுழல் காற்றுத் துரும்பு போல" எனும் உவமையையும் கையாள்கிறார். நீள அகல ஆழம் ஆகியவற்றை அறிய இயலாத் தன்மையால் பிறவிக் கடலை மட்டறுபவக் கடல் என்று உவமிக்கிறார். பிறவி எடுத்துப் பயனற்றுப் போவதைக் "கானில் நிலவு போல" எனக் குறிப்பிடுகிறார். "மடம்புகு நாய் போல", "உடை தேங்காய்ச் சிரட்டை போல", "நண்டளந்திடு நாழியாவனோ", "அரிசி விலை உலை அறியுமோ" எனக் கருத்துக்களைப் புலப்படுத்த எல்லோரும் அறிந்த நயம்மிக்க உவமைகளைக் கையாள்கிறார்.

**கடல்மடை திறந்தென அருள்மடை திறந்தடிமை**
**கண்குளிர்வ தெக்கா லமோ (மு.ச.86)**

என்றெல்லாம் உவமைகளைக் கையாள்வதுடன்,

**நற்பவளக் கொம்பே நவின்றமணிப் பெட்டகமே**
**கைப்பொருட்கு மெய்ப்பொருளே கண்ணே பராபரமே**
**(பரா.9)**

என ஒரே பாடலில் ஒன்றுக்கும் மேற்பட்ட உவமங்கள் வருமாறும் பாடல் புனைந்துள்ளார்.

**யாப்பு ஆளுமை, சந்த நயம், இசை நுட்பம்**

தமிழ் இலக்கிய இலக்கணங்களை நெடிது கற்றறிந்த குணங்குடியார் பெரும் புலமை பெற்றவராக விளங்கினார் என்பதற்கு அவருடைய பாடல்கள் சான்றாதாரமாக விளங்குகின்றன. அவருடைய இசைப் புலமையைக் கீர்த்தனைகள் எடுத்தியம்புகின்றன. நேரிசை வெண்பா, ஆசிரியப்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், கண்ணி, அந்தாதி போன்ற யாப்பு வடிவங்களைப் பயன்படுத்தி அவர் தம் பாடல்களை இயற்றியுள்ளார். அதேபோல் இசை இலக்கணத்தினின்றும் சிறிதும் பிறழவில்லை. எதுகை, மோனை, இயைபு ஆகியன குணங்குடியார் பாடல்களில் துள்ளி விளையாடுகின்றன. சந்த நயம் சிந்து பாடுகிறது. அந்தாதி அமைப்பும் காணக் கிடக்கின்றது.

குணங்குடியார் பாடல்கள் முழுவதிலும் இசையோடு பாடுவதற்குரிய கூறுகள் இருக்கின்றன. அவருடைய கீர்த்தனைப் பாடல்கள் அவரது இசை நுட்பத்திறனை வெள்ளிடை மலையாகப் புலப்படுத்துகின்றன. இசைப் பாடல்களை விருத்தப்பா, கீர்த்தனை, ஆனந்தக் களிப்பு எனும் வடிவங்களில் பாடியுள்ளார். அதிலும் விருத்தப்பாவைப் பயன்படுத்திக் கீர்த்தனைப் பாடல்களைப் பாடிப் புதுமுயற்சி செய்துள்ளார்.

இராக, தாள அமைப்புடன் இசைப் பாடலுக்கு விரைவு நடையை உண்டாக்கும் தொங்கல் அமைப்புச் சொற்களைப் பயன்படுத்தியும் பாடல்களை இயற்றியுள்ளார். இவருடைய கீர்த்தனைப் பாடல்கள் அனைத்தும் எல்லோரும் வாய்விட்டுப் பாடி மகிழும் இயல்புடையவை.

**பிற இலக்கிய ஆளுகை**

குணங்குடியார் தமக்குமுன் வாழ்ந்த மெய்ஞ்ஞானியரின் மொழிநடையையும் எடுத்தாண்டுள்ளார். இவர் குறிப்பாகத் தாயுமானவரிடம் மிகுந்த ஈடுபாடுடைய வராக விளங்கினார் என்பதை அவர்தம் பாடல்களின் வழி அறியமுடிகிறது.

**எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி**
**யெண்ணி ஏழைநெஞ்சம்**
**புண்ணாகச் செய்ததினிப் போதும் பராபரமே**
**(53)**

என்று தாயுமானவர் பாடுவது, குணங் குடியாரிடம்,

**எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி**
**இடைந்துமனம்**
**புண்ணாவ தற்கோ புகுந்தேன் நிராமயமே**
**(நிரா.53)**

என்று வெளிப்படுகிறது.

**எத்தனை விதங்கள் தான் கற்கினும்**
**கேட்கினும் என்**
**இதயமும் ஒடுங்கவில்லை**

என்கிறார் தாயுமானவர். இதனையே குணங்குடியார்,

**எத்தனை விதங்கள்தான் கற்கினும் கேட்கினும்**
**என்மனம் இணங்கு திலையே**
**(ஆநந்தப் பத்து.9:3)**

என்று பாடுகிறார். இதே போல்,

**அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய்**
**ஆனந்த புர்த்தியாகி**

என்று தாயுமானவர் பாடுவது, குணங் குடியாரிடம்,

**அங்குஇங்கு எனஒண்ணா அகண்டபரி புரணமாய்**
**எங்கு நிறைந்த இறையே நிராமயமே**
**(நிரா.17)**

எனக் காணப்படுகிறது.

**பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கம் அற**
**நிறைகின்ற**
**பரிபுரண ஆனந்தமே!**

என்று தாயுமானவர் பாடுவதை,

**பார்க்கும்இடம் எல்லாம் பரிபு ரணமாக**
**ஏர்க்கையுடன் நின்ற இயல்பே நிராமயமே!**
**(நிரா.14)**

என்று பாடுகிறார் குணங்குடியார். தாயுமானவர்,

**எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே**
**அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே**
**(பரா.221)**

என்பதைக் குணங்குடியார்,

**எந்த உயிரும் எமதுஉயிர்என்று எண்ணி**
**எண்ணிச்**
**சிந்தை தெளியஅருள் செய்வாய் நிராமயமே**
**(நிரா.157)**

என்கிறார்.

**தாயிருக்கப் பிள்ளை தளராது ஒருபோதும்**
**நீயிருக்க நான்தளர நேரோ பராபரமே**
**(பரா.249)**

எனத் தாயுமானவர் பாடுவது,

**தாயிருக்கப் பிள்ளை தளராது ஒருபோதும்**
**நீயிருக்க நான்தளர நேரோ நிராமயமே**
**(நிரா.64)**

எனக் குணங்குடியாரிடம் வெளிப்படுகிறது.

வள்ளுவருக்குப் பின்வந்த பாவலர் பலரும் திருக்குறளின் தாக்கமின்றி எழுதினாரில்லை. ஏனெனில் எல்லோரையும் வான்புகழ் அறக் கருத்துக்களால் ஈர்க்கும் வல்லமை அவர்தம் குறளுக்கு இருந்தது.

**மட்டறு பவக்கடல் தொலைக்குமொரு கவிழா**
**மரக்கலமும் நீயல் லவோ**
**(ஆநந்தப் பத்து.6)**

என்று பிறவியைக் கடலாகக் கொண்டு

அதைக் கடக்க உதவும் பெருங்கலனாக இறைவனைக் கண்டார் குணங்குடியார். இப்பாடல் வள்ளுவப் பேராசானின்,

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார்** **(10)**

எனும் குறளை நினைவுட்டுகிறது.

நேற்று இருந்தவன் இன்றைக்கு இல்லை இறந்து போனான் என்னும் நிலையாமை நிறைந்தது இவ்வுலகு. இதனை,

**நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்துஇவ் வுலகு** **(336)**

என்று குறள் குறிப்பிடுகிறது. குணங் குடியாரோ,

**இன்றுள்ளோர் நாளைக் கிருப்பதுபொய் என்பதையான்**
**கண்டுகொண்டேன் ஐயாஎன் கண்ணே றகுமானே**
**(றகு.கண்ணி.37)**

என்று குறிப்பிடுகிறார்.

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக** **(391)**

எனும் குறளை,

**கற்றபடி நடக்கக் கல்லாத பாவிஎனைச்**
**சித்தந் தெளிய அருள் செய்வாய் நிராமயமே**
**(நிரா.56)**

என்று ஆள்கிறார் குணங்குடியார்.

**சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்**
**கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்வீர்?**
**மாத்திரைக்குள் அருளும் மால்பே றரே**
**(ஐந்தாம் திருமுறை)**

என்று தேவாரத்தில் திருநாவுக்கரசர் பாடுவதை,

**சாத்திரங்கள் ஓதுஞ் சழக்கர் தமக்கும்அருள்**
**மாத்திரைப்போ தேனும் வருமோ நிராமயமே**
**(நிரா.44)**

எனக் குணங்குடியார் எடுத்தாள்கிறார். மாணிக்க வாசகரின்,

**வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி**
**ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்**
**கோனாகி யான்எனதென் றவரவரைக் கூத்தாட்டு**
**வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே**
**(திருச்சதகம், அறிவுறுத்தல், பா.5)**

என்ற பாடலின் சாயல், குணங்குடியாரின்,

**ஊனாகி உயிராகி ஊனுயிர்க்கு உயிரான**
**உண்மையென் முன்னிற் கவே** **(மு.ச.10)**

**ஊனாகி ஊனிலுயி ராகியெவ் வுலகுமாய்**
**ஒன்றா யிரண்டு மாகி**
**உள்ளாகி வெளியாகி யொளியாகி யிருளாகி**
**ஊருடன் பேரு மாகிக்**
**கானாகி மலையாகி வளைகடலு மாகிமலை**
**கானக விலங்கு மாகிக்**
**கங்குல்பக லாகிமதி யாகிரவி யாகிவெளி**
**கண்டபொரு ளெவையு மாகி**
**நானாகி நீயாகி அவனாகி அவளாகி**
**நாதமொடு புத மாகி**
**நாடுமொளி புரியஅடி யேனுமுமை நம்பினேன்**
**நன்மைசெய் தாளு தற்கே** **(மு.ச.22)**
**விண்ணாகி மண்ணாகி யெண்ணாகி வெகுவாகி**
**விரிவாகி மறைவு மாகி** **(மு.ச.24)**

எனும் பாடல்களில் இருக்கின்றன.

**முகத்தில் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்**
**அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்**
**(திருமந்திரம், ஒன்பதாம் தந்திரம்)**

என்ற திருமூலரின் பாடலை,

**முகக்கண் விழியொளியே முத்திதரும் உத்தமனே**
**அகக்கண் திறந்தோர்க்கு அறிவே பராபரமே**
**(பரா.54)**

என்று குணங்குடியார் பதிவு செய்கிறார்.

"அறம்" செய்து வாழ்வதற்குரிய பணத்தைத் தாமும் அனுபவிக்காமல் அடுத்தவருக்கும் கொடுக்காமல் புமியில் புதைத்து வைக்கும் வழக்கத்தை ஔவைப் பெருமாட்டி கடுமையாகச் சாடுகிறார். உடல் அழியக் கூடியது. உடலிலிருக்கும் உயிர் போனபின்

பணத்தைத் துய்க்க முடியாது. ஆகவே உயிருடன் இருக்கும்போதே பணத்தை நல்வழியில் செலவு செய்ய வேண்டும். இறப்புக்குப் பின்னும் புகழை நிலைநிறுத்த வழிதேட வேண்டும் என்பதை,

**பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்**
**கேடுகெட்ட மானிடரே! கேளுங்கள் - கூடுவிட்டிங்கு**
**ஆவிதான் போயினபின்பு யாரோ அனுபவிப்பார் பாவிகாள் அந்தப் பணம்**

என்று ஔவையார் தம் நல்வழிப்பாடலில் குறிப்பிடுகிறார். இதே கருத்தைக் குணங் குடியார்,

**ஓடியலைந்தும் இவ் வையகம் முற்றும் உழன்றுழன்றும்**
**தேடியெடுத்த திரவியம் யாவையும் செத்த பின்பு**
**நாடியெடுப்பதும் உண்டோ? மறந்து நடக்கும் நெஞ்சமே**
**வாடியிறந்து அறஞ் செய்வாய் குணங் குடி வாய்த்திடுமே**
**(தவமேபெற வேண்டுமெனல்.1)**

என்று பதிவு செய்கிறார்.

இவற்றோடு குணங்குடியார் பாடல் களில் இடைக்காடர், பட்டினத்தார் போன்றோரது இலக்கிய ஆளுமைகளும் இருக்கின்றன.

**ஊருஞ் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப்பெற்ற**
**பேருஞ் சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளுஞ்**
**சீருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே**
**யாருஞ் சதமல்ல நின்தாள் சதம் கச்சி ஏகம்பனே (13)**

என்று பட்டினத்தார் திருவேகம்பா மாலை குணங்குடியாரிடம்,

**உற்றா ரிருந்தென்னப் பெற்றா ரிருந்தென் உனக்குதவி**
**சற்றா யினும்இல்லை சொன்னேன்சொன் னேன்இது சத்தியமாய்ச்**
**செற்றாலும் வைத்தடி வாங்காமல் நிற்கிற் செயம்பெறலாம்.**
**கற்றார் குணங்குடி கொண்டிடு வாய்மனக் கண்மணியே**
**(தவமேபெற வேண்டுமெனல்.7)**

என்று வெளிப்படுகிறது.

மெய்ஞ்ஞானக் கருவுலமாக, மெய்ஞ் ஞானக் களஞ்சியமாக, மெய்ஞ்ஞானச் செல்வராக, மெய்ஞ்ஞானக் கடலாக விளங்கிய குணங்குடியார் ஒரு தேர்ந்த இலக்கியப் படைப்பாளியாகவும் திகழ்கிறார். அவர்தம் அருள் ஞானப் பாடல்களில் கற்பனைச் சிறப்பு, மரபுத் தொடர்கள், வழக்குத் தொடர்கள், சொல்லடுக்குகள், பழமொழிகள், பரிபாஷை, மோனை, எதுகை, இயைபு, அந்தாதித் தொடைகள், உவமை, உருவகம், வினாத் தொடர்கள், கருத்துக்களை நிரல் படுத்திக் கூறுதல், பிறமொழிச் சொற்களின் ஆளுகை, பிற இலக்கிய ஆளுகை, உண்மையை உபதேசிப்பது, மெய்ப் பொருளை விளக்குவது, முற் பகுதியில் ஒரு கருத்து - பிற்பகுதியில் அதற்கு முரணான கருத்து, உரையாடல் அமைப்பு, திரும்பத் திரும்பக் கூறுதல், ஒரே மாதிரியான வாக்கிய அமைப்பைக் கையாள்வது, ஒலி நயம் மிக்க சொல்லாட்சி போன்ற பல உத்திகள் இருக்கின்றன. அவை குணங்குடியாரின் இலக்கியப் படைப்பாளுமைச் சிறப்பை வெளிக்காட்டுகின்றன.

**துணைநூற் பட்டியல்**

1. அப்துல் ரகுமான் (ப.ஆ. மற்றும் கு.ஆ.). *(1980). குணங்குடியார் பாடற்கோவை,* சிவகங்கை, அகரம்.
2. நயினார் முகம்மது சி. *(1993). மஸ்தான் சாகிபும் தாயுமானவரும் - ஓர் ஒப்புநோக்கு,* திருச்சிராப்பள்ளி : உமறு பதிப்பகம்.

3. நாராயணசாமி முதலியார் (ப.ஆ.). (1875). மஸ்தான் சாகிபு பாடல், சென்னை, பிரபாகர அச்சுக்கூடம்.
4. முகம்மது உவைஸ் ம. (1965). ஞானச் செல்வர் குணங்குடியார், சென்னை, யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்.
5. ரஷீத் என். ஏ. (1977). ஞான வள்ளல் குணங்குடி மஸ்தான் சாகிபு பாடலும் உரையும், சென்னை, ஞான வள்ளல் பதிப்பகம்.
6. வேலாயுத முதலியார் (ப.ஆ.), (1887). மஸ்தான் சாகிபு திருப்பாடற்றிரட்டு, சென்னை, கலைக்கியான விளக்க அச்சுக்கூடம்.